**த. நா.ச.பே. எண் : 001** **நாள் :04.12.2014**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி **110–**ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் நிறைவேற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு குறித்து இன்று **(4.12.2014)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆற்றிய உரை:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

" என் மக்கள் எதற்காகவும்,
எப்போதும் யாரிடமும் கையேந்தி நிற்காத
காலத்தை உருவாக்குவதே
என் வாழ்நாள் லட்சியம்" – என்று சூளுரைத்து
தமிழர்தம் வாழ்வு செழிக்க
தம் வாழ்வையே அர்ப்பணித்து,
தமிழகம் முதல்நிலை காண
விழிகாட்டி, வழிகாட்டி, ஒளிகாட்டும்
''அம்மா" எனும்
மூன்றெழுத்து மந்திரமே !

கன்னித் தமிழ் பூமி வழியே,
கழகம் என்னும் கோவில் வழியே
காலத் தாய் அள்ளித் தந்த
கருணை தெய்வமே !

முத்தான தமிழ் மண்ணைக் காப்பதற்கு
வித்தாக வந்துதித்த வெற்றித் திருமகளே !

வாடுகிற ஏழைக்கும்,
வருங்காலத் தலைமுறைக்கும்
பூரண ஒளியேற்றும்
புண்ணியமே !

விழிகளில் எல்லையில்லா கருணை தேக்கி,
வீடுதோறும் விலையில்லா அரிசியாக்கி,
நித்தமும்  தமிழர் இல்லங்களில்
நிலாச்சோறு ஊட்டுகிற சத்தியத் தாயே !

சிப்பிக்குள் இருந்து தவம் செய்தே
முத்துக்கள் பிறப்பது போல்
செந்தமிழ் நாட்டுக்கு
சேவையாற்றி திளைப்பதற்கே
பிறப்பெடுத்து வந்த பேரறிவே !

ஏழைத் தொழிலாளிக்கு
என்.எல்.சி உரிமையைக்
காத்துத் தந்தும்,
கழனிவாழ் உழவர்க்கு
காவேரி, முல்லைப் பெரியாறை
மீட்டுத் தந்தும்,
அவர்தம் கட்டுத் துறைக்கு
ஆடு–மாடுகளை
விலையில்லாது அள்ளித் தந்தும்,
வெள்ளாமை காத்திட்ட வீரமங்கையே !
வெண்மைப் புரட்சிக்கும் வித்திட்ட விவேகமே !
பூமி வெப்பம் ஆகுதென்று
உலகம் இன்று புலம்புவதை,
தன் தீர்க்க தரிசனத்தால் உணர்ந்து
மண்ணைக் குளிர்விக்க
மழைநீர் சேகரிப்புத் திட்டம் தந்த
மாதரசியே !

அன்னைத் தமிழ் மண்ணில்
அந்நிய முதலைகளை அனுமதியேன் என்று
சிறு–குறு வணிகத்தைக் காத்திட்ட
காவல் அரணே !

கழனியும், கணினியும் ஒருசேரத் தழைத்திட,
மண்ணுக்கு நீரும்,
மாணவர்க்கு மடிக்கணினியும் தந்த
வள்ளலே !

அன்று வறுமையில் வாடிய தமிழ் மண்ணை
இன்று செழுமையில் கிடத்திய
செந்தமிழே !

பத்துக்கோடி தமிழினம்
பாசத்தோடு ‘‘அம்மா’’ என அழைக்கும்
தேவாரமே !

தியாகமே உருவான
திருமந்திரமே !
திருவரங்கம் தந்த
மறு கீதையே !

தாயே ! தங்கள் பொற்பாதம் பணிந்து
தாங்கள் வீற்றிருக்கும் திசை நோக்கி
என் தலைவணக்கம் செய்கின்றேன்.

மக்கள் முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி மாண்புமிகு அம்மா அவர்களால் சட்டமன்றப் பேரவையில், சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஒரு பொய்யான குற்றச்சாட்டை தி.மு.க.வினர் அடிக்கடி எழுப்பி வருகின்றனர். அதிலும், குறிப்பாக சட்டமன்ற தி.மு.க. குழுவின் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதே, 110 விதியின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்புகள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என ஒரு உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை மேற்கொண்டார். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தின் போதே இதற்கு தக்க பதிலடி கொடுத்தார்கள். அப்போது வரை, 430 திட்டங்கள் தன்னால் அறிவிக்கப்பட்டன என்றும் அதில் 424 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரிவித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவற்றில் ஒரு சிலவற்றை பற்றி எடுத்துரைத்தார்கள். ஆனால், மீண்டும் மீண்டும் இதைப் பற்றியே உண்மைக்கு மாறாக தெரிவித்து வந்தால், அறிவிப்புகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என மக்களை ஏமாற்றி விடலாம் என திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட சிலர் கருதுகின்றனர்.

சட்டமன்றப் பேரவை விதி எண். 110-ன் கீழ், புரட்சித் தலைவி அம்மா அவர்களால் செய்யப்பட்ட அறிவிப்புகள் தமிழக மக்களுக்கு வரப் பிரசாதமாக அமைந்துள்ளன என்பதை தமிழக மக்கள் அனைவரும் நன்கு உணர்ந்துள்ளனர். 110 விதியின் கீழ் செய்யப்பட்ட அறிவிப்புகள் தமிழக மக்களின் தலைவிதியையே மாற்றி அமைத்துள்ளதை அனைவரும் அறிவர். நிர்வாகத்தில் புதிய விதியை ஏற்படுத்திய இந்த 110 விதி, அரசியல் கட்சிகளின் விதியையே மாற்றி, அவர்களை இன்று வீதிக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளதை எல்லோரும் நன்கு அறிவர்.

2011-12 ஆம் ஆண்டு விதி எண் 110-ன் கீழ், 51 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 51 திட்டங்களுக்கும் அரசாணைகள் வெளியிடப்பட்டு, 39 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 11 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.

2012-13 ஆம் ஆண்டு, விதி எண் 110-ன் கீழ், 87திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 83 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 48 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 34 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால் ஒரு திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீதமுள்ள 4 திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன.



2013-14 ஆம் ஆண்டு, விதி எண் 110-ன் கீழ், 292 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 287 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 126 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 161 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. ஒரு திட்டம் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது. 4 திட்டங்களுக்கு அரசாணை வெளியிடப்பட வேண்டி உள்ளது.

2014-15 ஆம் ஆண்டு, விதி எண் 110-ன் கீழ் 236 திட்டங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதில் 116 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, 5 திட்டங்கள் முடிக்கப்பட்டுள்ளன. 111 திட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 3 திட்டங்கள் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளன. 117 திட்டங்களுக்கு அரசாணை வெளியிடப்பட வேண்டி உள்ளது.

நிறைவேற்றப்பட்ட திட்டங்களில், சிலவற்றை இந்த அவையில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவ மாணவியர் கல்வி திட்டங்களின் கீழ் உதவித்தொகை பெற வேண்டும் என்றால், அவர்களுடைய பெற்றோரின் ஆண்டு வருமானம் ஒரு லட்சம் ரூபாய்க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இருந்தது. இந்த உச்சவரம்பு இரண்டு இலட்சமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது.

பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம், 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது. இத்திட்டம் 7 மற்றும் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவிகளுக்கும் 2013–14 முதல் விரிவுப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. கல்லூரி மாணவியர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர் துணிகள் துவைப்பதற்காக நீண்ட நேரத்தினை செலவிடுவதால், அந்த நேரத்தில் படித்தல், விளையாட்டு, உடற்பயிற்சி, தியானம், சிறப்பு வகுப்புகள் போன்ற பயனுள்ள வேலைகளை செய்வதற்காக 76 விடுதிகளுக்கு சலவை உபகரணங்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை தொடர்ந்து 40 விடுதிகளுக்கு சலவை உபகரணங்கள் வழங்கப்பட்டு விட்டன. மீதமுள்ள 36 விடுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

இளநீர், சீயக்காய் மற்றும் பருத்தி போன்ற பாரம்பரியம்மிக்க வேளாண் பொருட்களின் மருத்துவத் தன்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையிலும், இதன் பயன்பாட்டினை

அதிகரிக்கும் வகையிலும், வழக்கொழிந்து போன பாரம்பரியப் பொருட்களை புழக்கத்தில் கொண்டுவரும் வகையிலும்; இயற்கையின் படைப்பினை பயன்படுத்தி மக்களின் நலத்தினை



பேணிப் பாதுகாக்கும் வகையிலும்; விவசாயிகளின் வருமானத்தை பெருக்கும் வகையிலும்; பாரம்பரிய வேளாண் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை மாநிலம் முழுவதும் ஏற்படுத்த 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து மாநில, மாவட்ட மற்றும் வட்டார அளவில் இது குறித்து 418 கருத்தரங்குகள், 770 பேரணிகள், குறும்படங்கள், தொலைக்காட்சி மற்றும் வானொலிச் செய்தி மூலம் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதனால் இப்பாரம்பரிய பொருட்களை மக்கள் உபயோகிப்பது அதிகரித்துள்ளது. மேலும் சிறுதானியங்களின் சாகுபடிப்பரப்பு 2013–14 ஆம் ஆண்டில் 3 இலட்சம் எக்டருக்கு மேல் அதிகரித்துள்ளது.

உழவர் பெருவிழா நடத்தப்படும் என்னும் அறிவிப்பை நடைமுறைப்படுத்த, பல்வேறு துறைகள், இடுபொருட்கள் விற்பனையாளர்கள் மற்றும் முன்னோடி வங்கிகளை ஈடுபடுத்தி வேளாண் பணிகள், உற்பத்தித் தொழில்நுட்பங்கள், இடுபொருட்கள் மற்றும் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளும் வகையில், 385 வட்டாரங்களிலுள்ள அனைத்து வருவாய் கிராமங்களிலும், சித்திரை 1 முதல் 30 நாட்களுக்கு ஆண்டுதோறும் ஒருமுறை உழவர் பெருவிழா எனும் முன்பருவ விழிப்புணர்வு முகாம்கள் நடத்த ஆணையிட்டு அதன் மூலம் இதுவரை ரூ.79 கோடி மதிப்பிலான இடுபொருட்கள் வழங்கப்பட்டு, 80.86 லட்சம் விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். 80,000 கால்நடை நல முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 18.75 இலட்சம் மண்மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, 11 லட்சம் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள் விநியோகிக்கப்பட்டு உள்ளன.

போதிய மழை இல்லாத காலங்களிலும் பயிர்களுக்கு நீர் கிடைக்க வகை செய்திட, தமிழகத்தில் 70,000 பண்ணைக் குட்டைகள் அமைக்க ஆணையிட்டதோடு இதன் மூலம் கிடைக்கும் நீரை சிக்கனமாக சேமித்து சாகுபடி செய்ய டீசல் எஞ்ஜின்களுடன்கூடிய 700 மழை தூவுவான் மற்றும் நகரும் தெளிப்பு நீர்ப்பாசன அமைப்புகள், Rain gun and Mobile Sprinklers குறைந்த வாடகைக்கு விவசாயிகளுக்கு வழங்க 2 கோடி ரூபாய் செலவில் வாங்கப்பட்டு, 350 வட்டாரங்களில், வட்டாரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் விவசாயிகள் பயன் பெறும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உணவு தானிய உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு நிலையினை விரைந்து அடைய ஏதுவாக, உற்பத்தி இடைவெளியினைக் குறைக்கும் முன்னோடித் திட்டங்களை ஒருங்கிணைத்து, விவசாயிகள், விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்கப் பணியாளர்கள் ஒன்றுகூடி, விவசாயிகள்

அளவிலான பயிர்த்திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இதன்தொடர்ச்சியாக கிராம, வட்டார, மாவட்ட அளவில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகளுக்கான 3 வகையான



விரைவுத் திட்டங்கள் மூலம் உணவு தானிய உற்பத்தியினைப் பெருக்க 96.94 கோடி ரூபாய் செலவில் ''விரைவுத் திட்ட அணுகுமுறை'' செயல்படுத்தபட்டது. இதில் 23,506 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகளும், 32,091 எக்டர் பரப்பில் செயல்விளக்கங்களும், 5191 பயிர்ப் பாதுகாப்புக் கருவிகளும், 686 நுண்ணீர் பாசனக் கருவிகளும், மானிய விலையில் இதர இடுபொருட்களும் வழங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதனால் தமிழகம் 2013–14 ஆம் ஆண்டில் 110.65 லட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி அடைந்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கடந்த மூன்றாண்டு காலமாக வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் 1,61,502 வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு 211.84 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நீர் பற்றாக்குறை உள்ள மாநிலம் என்பதால், பாசனத்திற்கு கிடைக்கும் தண்ணீரை வீணாக்காமல் சிக்கனமாகப் பயன்படுத்தி, பயிரிடும் பரப்பினை அதிகரித்து அதிக மகசூல் பெறுவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர் முதலான நுண்ணீர்ப் பாசன அமைப்புகளை சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியத்திலும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியத்திலும், இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழக அரசு வழங்கி இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் 2,35,000 ஏக்கர் பரப்பளவில் நுண்ணீர்ப் பாசன அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளது.

நாகப்பட்டினத்தில் 18.40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம், துவங்கப்பட்டு, இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் தூத்துக்குடியில் ஒரு மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையமும், நாகப்பட்டினம் மற்றும் பொன்னேரியில் தலா ஒரு மீன்வளத் தொழில்நுட்ப நிலையமும் அமைந்துள்ளன. இவ்வாண்டு புதியதாக மூன்று ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையங்கள் ரூபாய் ஐந்து கோடி நிதியுதவியுடன் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலும், கிருஷ்ணகிரி மாவட்டம் பாரூரிலும், கன்னியாகுமரி மாவட்டம் இராஜாக்கமங்கலத்திலும் துவக்கப்பட்டுள்ளன.

15.25 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டு, நாகப்பட்டினத்தில் மீன்வள தொழில்நுட்ப நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்தொழில்நுட்ப நிலையத்தில் ''இறால் பண்ணையத்தில் சிறப்பான மேலாண்மை நடைமுறைகள்'' என்ற மூன்று மாத சான்றிதழ் படிப்பும், ''நீர் வாழ் உயிரினங்கள் வளர்ப்பு'' என்ற ஒரு

வருட சான்றிதழ் படிப்பும், ‘‘நன்னீர் மீன் வளர்ப்பு‘‘ என்ற தலைப்பில் பயிற்சியும் மற்றும் பல்வேறு பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

கடல் மீனவர்களுக்கு தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண தொகை ரூ.1800/–லிருந்து ரூ.2700/– ஆக உயர்த்தி வழங்கப்படும் என்ற அறிவிப்பும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடல் மீனவ மகளிருக்கு சேமிப்பு மற்றும் நிவாரண தொகை ரூ.1800/–லிருந்து ரூ.2700/– ஆக உயர்த்தி வழங்கப்படும் (2014–2015) என்ற அறிவிப்பும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

68 பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளுக்கு ரூ.86.97 கோடி செலவில் நவீன வசதிகள் மற்றும் சூரிய ஒளி உபகரணங்கள் கூடிய விடுதிகள் கட்டப்படும் என்னும் அறிவிப்பின்படி, ஆணையிடப்பட்ட 68 விடுதிகளில் 57 விடுதிகளுக்கான இடங்கள் பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. எஞ்சிய 11 விடுதிகளுக்கு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

<u>பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்கப்பட்ட 57 விடுதிகளின் விவரம்</u>

- முடிவடையும் தருவாயில் உள்ளவை – 4
- இரண்டாம் தளம் மேற்கூரை – 6
- முதல் தளம் மேற்கூரை – 9
- இதர பணிகள் – 38

ரூ.2.50 கோடி செலவில் 10 புதிய விடுதிகள் (5 பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 3 மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், 1 சீர்மரபினர் மற்றும் 1 சிறுபான்மையினர்) துவங்கப்படும் என்ற அறிவிப்பு நிறைவேற்றப்பட்டு 10 விடுதிகளும் துவங்கப்பட்டுவிட்டன.

கல்வி உதவித் தொகைகள் பெறுவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பினை ஒரு லட்சம் ரூபாயிலிருந்து, இரண்டு லட்சம் ரூபாயாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பொதுமக்கள் இணையதள மூலமாக சொத்து தொடர்பான வில்லங்கங்களை பார்க்கும் வசதி ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் இணையதள மூலமாக சொத்து தொடர்பான வில்லங்கங்களை பார்க்கும் வசதி 11.06.2014 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காணொலிக்காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

ஆவணங்களை குறிப்பிட்ட நாளில் பதிவு செய்ய இணையதளம் மூலம் சார்பதிவாளரிடம் முன்பதிவு செய்யும் முறை அறிமுகம் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது.

ஆவணங்களை குறிப்பிட்ட நாளில் பதிவு செய்ய இணையதளம் மூலம் சார்பதிவாளரிடம் முன்பதிவு செய்யும் முறை 6.11.2013 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களால் காணொலிக்காட்சி மூலம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளை ஏற்படுத்தி அதிக அடமான கடன் வழங்கவும், வேளாண் கூட்டுறவு சந்தை வளாகம், ஒழுங்கு முறை விற்பனைக் கூட வளாகம் ஆகியவற்றில் சேமிப்பு வசதிகளை அதிகப்படுத்தவும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கூடுதல் சேமிப்பு வசதிகளை ஏற்படுத்தி உணவு தானியங்களை சேமிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்ற அறிவிப்பின்படி 1166 கிடங்குகளின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்துவிட்டன. ஆக அந்த அறிவிப்பு நிறைவேற்றப்பட்டுவிட்டது.

139 நலிவடைந்த தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், முதற்கட்டமாக 72 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு ரூ.50 இலட்சம் வீதம் சிறப்பு காசுக் கடனுதவி வழங்கப்படும் என்றும், இதன்மூலம் வணிகத்திறன் ரூ. 1 கோடியாக உயரும் என்றும் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதன்படி 72 சங்கங்களுக்கு சிறப்புக் காசுக் கடன் ரூ.36 கோடி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 31.03.2013இல் இருந்த உறுப்பினர் கடன் நிலுவை ரூ.3,487.23 லட்சத்திலிருந்து 31.03.2014இல் ரூ.7,803.98 லட்சமாக உயர்ந்துள்ளது.

வனம் மற்றும் வனத்தைச் சுற்றியும், மற்றும் அதனைச் சார்ந்தும் வாழும் மக்களுக்கு அவ்வப்போது வனவிலங்குகளினால் உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் உயிர்ச் சேதத்திற்காக அரசினால் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை, முன்னர் ரூ.1.5 லட்சமாக இருந்தது, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, 2011 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 3 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகளில் ஏற்படும் காலிப் பணியிடங்களை நிரப்ப "மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம்", (Medical Services Recruitment Board) என்ற ஒரு அமைப்பு அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டவாறு, இந்த வாரியம் ஜனவரி 2012–ல் அமைக்கப்பட்டது. இந்த வாரியத்தின்

வாயிலாக, இதுவரை **3015** மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் காலமுறை ஊதியத்தில் இடஒதுக்கீட்டை பின்பற்றி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும், இந்த தேர்வு வாரியம் மூலம்



இதுவரை, **48** இயன்முறை சிகிச்சையாளர்கள், **60** திறன் உதவியாளர்கள், **29** ஈ.சி.ஜி. டெக்னீஷியன்கள், **197** ரேடியோகிராபர்கள், **651** மருந்தாளுநர்கள், **200** கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் **8** நோய் தீர்வியல் உதவியாளர்கள் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஆக, இவ்வாரியம் தொடங்கப்பட்டு இதுநாள் வரை மொத்தம் **4,461** மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா காலிப்பணியிடங்கள் மருத்துவத் துறையில் நிரப்பப்பட்டுள்ளன.

ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடம், புதுதில்லியில் உள்ள எய்ம்ஸ் (AIIMS) மருத்துவமனைக்கு நிகராக, பல்நோக்கு உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனையாக மாற்றப்படும் என்று அறிவித்ததைத் தொடர்ந்து, இந்த மருத்துவமனை புரட்சித் தலைவி அம்மா அவர்களால் **21.2.2014** அன்று திறக்கப்பட்டு நவீன மருத்துவக் கருவிகளுடன் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**2012–13**ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டபடி, **20** ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. மேலும் **2013–14**ஆம் ஆண்டில் **118** புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் துவக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் தொகை ரூ.**12,000**ஆக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டு, அவ்வாறு உயர்த்தப்பட்ட தொகை ஜுன்–**2011** முதல் வழங்கப்படுகிறது. இது வரை **18,60,573** நபர்களுக்கு ரூ.**1667.39** கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதன் முறையாக கிராம சுகாதார செவிலியர்களுக்கு இலவசமாக மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் **9397** கிராம சுகாதார செவிலியர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**2012–13** ஆம் ஆண்டில் தஞ்சாவூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் தலா ஒரு அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்படும் எனவும், **2012–13** ஆம் ஆண்டில் 7 இடங்களில் புதிய அரசு பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகள் தொடங்கப்படும் எனவும், **2012–13**ஆம் ஆண்டில் **11** இடங்களில் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும் எனவும்,

2013–14–ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்படும் எனவும் 2013–14–ம் ஆண்டில் 5 இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் தொடங்கப்படும்



எனவும் 2014–15 ஆம் ஆண்டில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டவாறு, மேற்கூறிய அனைத்து இடங்களிலும் கல்லூரிகள் தொடங்கப்பட்டு மாணவ, மாணவியர் பயின்று வருகின்றனர்.

நெடுஞ்சாலைத்துறைக்காக 35 அறிவிப்புகள் அறிவிக்கப்பட்டுள்ளன. 24 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. அவற்றில் 4 பணிகள் முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது. நடைபெற்றுவரும் பணிகளும் பல்வேறு நிலையில் உள்ளன. இதில், 2011–2012 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 5 அறிவிப்புகளில் 1 பணி முடிக்கப்பட்டு, 1 பணிக்கு நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்றுவருகிறது. மீதமுள்ள 3 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2012–2013 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 6 அறிவிப்புகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டு, 2 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 2 பணிகள் நடைபெற்றுவருகின்றன. 2013–2014ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 8 அறிவிப்புகளில், 1 பணி முடிக்கப்பட்டு மக்களின் பயன்பாட்டில் உள்ளது. மேலும், 5 பணிகள் தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகின்றன மற்றும் 2 பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. 2014–2015 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட 16 அறிவிப்புகளில் 5 பணிகளுக்கு அரசாணை வழங்கப்பட்டு பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளன. மீதமுள்ள 11 பணிகளுக்கான கருத்துருக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

காவல்துறை, தீயணைப்புத் துறை மற்றும் சிறைத்துறை பணியாளர்களுக்கு ‘‘உங்கள் சொந்த இல்லம்’’ திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித்தரப்படும் என புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். முதல் கட்டமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள மேலக்கோட்டையூரில் 47.6 ஏக்கர் பரப்பளவில் 2673 வீடுகள் கட்டுவதற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 26.10.2012 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மற்ற மாவட்டங்களில் இடம் கண்டறியப்பட்டு வீடுகள் கட்டுவது நடவடிக்கையில் உள்ளது.

காவலர்கள் செய்து வந்த பணிகளில் சிலவற்றை செய்வதற்கும், காவல் படைக்கு உதவுவதற்கும், தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர்படை ஒன்று உருவாக்கப்படும் என்று

29.10.2012 அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர்படையில் 9079 இளைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு தமிழ்நாடு முழுவதும் உள்ள



மாவட்டங்கள் / மாநகரங்களில் அவர்களுக்கென வரையறுக்கப்பட்ட காவல் பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள்.

"காவல் துறையினருக்காக ஏற்படுத்தப்பட்ட பல்பொருள் அங்காடிகள்" (Canteens) மூலம் பொருட்களை குறைந்த விலையில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் 6,800 அலுவலர்களும் பெற வழிவகை செய்யப்படும் என புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டார்கள். இது நிறைவேற்றப்பட்டுள்ளது.

வீட்டுவசதி வாரிய ஒதுக்கீடுகளில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடைமுறையில் உள்ள 1 சதவீத ஒதுக்கீட்டிற்கு பதிலாக 3 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது அது தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

சென்னை – பெங்களூர் நெடுஞ்சாலையிலுள்ள திருமழிசையில் 311.05 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.2160 கோடி மதிப்பீட்டில் 12,000 அடுக்குமாடி குடியிருப்புகளுடன் கூடிய துணைக்கோள் நகரம் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது, இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னை, அசோக்பில்லர் அருகில், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான மரவேலைப் பிரிவில் (Wood Working Unit) காலியாக உள்ள 3.73 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ 100 கோடி மதிப்பீட்டில், 554 பன்னடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு திட்டக்கருத்துரு தயாரிப்பில் உள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கிரயப் பத்திரம் வழங்கப்படாமல் உள்ள 45,939 ஒதுக்கீட்டாளர்கள் பயன்பெறும் வகையில், வட்டிச் சலுகைத் திட்டம் மேலும் 6 மாதங்களுக்கு நீட்டிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் நீட்டிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுவிட்டது.

சென்னை, காஞ்சிபுரம், கோயம்புத்தூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, சேலம், விருதுநகர், திண்டுக்கல் மற்றும் திருச்சி ஆகிய 9 மாவட்டங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான நிலத்தில் 32 மனைகள், 1,630 தனி வீடுகள் மற்றும் 2,792 அடுக்குமாடி குடியிருப்புகள்

**(4454)** சுமார் ரூபாய் **918** கோடியே **45** லட்சம் மதிப்பீட்டில் சுயநிதித் திட்டத்தின் கீழ் கட்டப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

-13-

தொழில் துறையில் வெளியிடப்பட்ட 25 அறிவிப்புகளில் 3 முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளன. 21 அறிவிப்புகள் செயலாக்கத்தில் உள்ளன. ஒரு திட்டம் உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

சிப்காட் நிறுவனத்தால் பராமரிக்கப்பட்டு வரும் தொழில் பூங்காக்களில் ரூ.**100** கோடி செலவில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பின்படி,

கடந்த மூன்று ஆண்டுகளில், சிப்காட் நிறுவனம் தனது தொழில் பூங்காக்களில் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.**142.32** கோடி செலவிட்டுள்ளது.

அசோக் லைலண்ட் – நிசான், டெய்ம்லர் – இந்தியா, யமஹா மோட்டார் லிமிடெட், எய்ச்சர் மோட்டார் லிமிடெட், பிலிப்ஸ் கார்பன் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுடன் **5** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் **14.5.2012** அன்று ஏற்படுத்திக் கொள்ளப்பட்டன. அதன்படி, இந்நிறுவனங்கள் ரூ. **5700** கோடி தமிழ்நாட்டில் முதலீடு செய்யும். மேலும், **9,530** நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும் வழங்கப்படும் என்ற இந்த அறிவிப்பும் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒரு நிறுவனம் தவிர ஏனைய நான்கு நிறுவனங்கள் இத்திட்டத்தினை துடிப்புடன் செயல்படுத்தி வருகின்றன. இதுவரை ரூ.**6,680** கோடி முதலீடு மேற்கொள்ளப்பட்டு, **7841** நபர்களுக்கு நேரடியாக மற்றும் மறைமுகமாக வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலே சொல்லப்பட்ட **5** புரிந்துணர்வு ஒப்பந்தங்களைத் தவிர, மேலும் **12** நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்படும் என்றும், இதன் மூலம் ரூ. **20,975** கோடி முதலீடும், **36,855** நபர்களுக்கு நேரடி வேலை வாய்ப்பும், சுமார் ஒரு இலட்சம் நபர்களுக்கு மறைமுக வேலை வாய்ப்பும் கிடைக்கும் என்றும் அறிவிக்கப்பட்ட அறிவிப்பு நிறைவேற்றப்பட்டு வருகிறது. **12** புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் **5.11.2012** அன்று புரட்சித் தலைவி அம்மா அவர்களின் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டன. இந்நிறுவனங்களில் இதுவரை ரூ.**6203.85** கோடி முதலீடு செய்யப்பட்டு **5290** நபர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மூலம் இது வரை 27 திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 19 திட்டங்களுக்கு அரசாணைகள் வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் தலா 100 MLD திறன் கொண்ட கடல்நீரை நன்னீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு அதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, சென்னையைச் சார்ந்த தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு ஆய்வுப் பணிக்கான உத்தரவு வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டத்தைச் சார்ந்த 1,153 குடியிருப்புகளிலுள்ள 5,76,000 மக்கள் பயன்பெறும் வகையில் கொள்ளிடம் ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூ.125 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படும் என புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன்படி ரூ.495.70 கோடியில் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள 134 ஊரக குடியிருப்புகளில் வசிக்கும் 1,55,000 மக்கள் பயன்பெறும் வகையில் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு 114 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, பரிசீலனையில் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 177 ஊரகக் குடியிருப்புகளில் வசிக்கும் 1,27,720 மக்கள் பயன்பெறும் வண்ணம் காவேரி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு ரூபாய் 32 கோடி மதிப்பீட்டிலான கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்தப்படும் என்று மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதன்படி ரூ.48.67 கோடியில் அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 65 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகளை விரைந்து முடிக்க முடுக்கி விடப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் விரிவுபடுத்தப்பட்ட புதிய உழவர் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்போது பயனடைந்தவர்களின் எண்ணிக்கை 32.89 லட்சம் நபர்கள் ஆகும். இதற்கென ரூ.2,781 .55 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

2012–13–ஆம் நிதியாண்டில் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 9 வட்டங்கள் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டது.

1,481 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கடலோர பேரிடர் இன்னல்கள் குறைப்புத் திட்டம், உலக வங்கி நிதி உதவியுடன் துவங்கப்படும் என்ற அறிவிப்புக்கிணங்க அரசாணை வெளியிடப்பட்டு, பணிகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் சார்பாக 21 திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவற்றில் அனைத்து திட்டங்களுக்கும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ரூ.750 கோடி மதிப்பீட்டில் டெல்டா அல்லாத மாவட்டங்களில் 50,000 பண்ணைக் குட்டைகள் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் என்ற அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது.

16,772 துப்புரவு பணியாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும் என்றும், அவர்களுக்கு மாதத் தொகுப்பூதியமாக ரூ. 2000 மற்றும் அகவிலைப்படி ரூ. 40 மாதந்தோறும் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டதற்கு இணங்க அரசாணை வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களிலிருந்து பிளாஸ்டிக் கழிவுகளை அறவே ஒழிக்க, பிளாஸ்டிக் கழிவுகளைக் கொண்டு சாலைகள் அமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி, 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,600 கிலோ மீட்டர் நீளமுள்ள பிளாஸ்டிக் தார்ச் சாலைகள் அமைக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு, இதுவரை 786.61 கி.மீ. நீளமுள்ள சாலைகள் ரூ.91.14 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டுள்ளன. வங்கிகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.6000 கோடி பொருளாதாரக் கடன்கள் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. வங்கியாளர்களின் ஒத்துழைப்புடன் ரூ.6035.56 கோடி சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கப்பட்டு முழுமையாக நிறைவேற்றப்பட்டது.

சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் இருந்து 1000 வங்கி முகவர்கள் உருவாக்கப்பட்டு இம்முகவர்கள் வங்கிக் கிளைகள் இல்லாத குக்கிராமங்களில் வங்கிச் சேவையினை மக்களின் இருப்பிடத்திற்கே சென்று வழங்குவர் என அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வகையில் 3176 வங்கி முகவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

2011 - 2012 ஆம் ஆண்டில் பள்ளிக் கல்வித் துறை சார்பாக 100 அரசு / மாநகராட்சி / நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்று

அறிவிக்கப்பட்டதும், **65** தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்படும் என்றும் மற்றும் **710** நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும்



என்றும் அறிவிக்கப்பட்டதும் நிறைவேற்றப்பட்டுவிட்டன. 16,549 பகுதி நேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டதில் 15,169 பணியிடங்கள் நிரப்பப்பட்டு விட்டன. நீதிமன்ற வழக்குகள் காரணமாக மீதமுள்ள 1380 பணியிடங்களுக்கான நியமனம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்ட அடிப்படை வசதிகள் மற்றும் மேம்பாடு குறித்த விவரம் பின்வருமாறு:–

தலைமை ஆசிரியர் அறைகள் **565**-ம்; கூடுதல் வகுப்பறைகள் **2560–**ம்; பொதுக்கழிப்பறைகள் **2794–**ம்; மகளிர் கழிப்பறைகள் **6326–**ம்; குடிநீர் வசதிகள் **3125–**ம்; பள்ளிச்சுற்றுச்சுவர்கள் **4315–**ம்; சமையலறைகள் **7–**க்கும் ஆன பணிகள் முடிக்கப்பட்டன.

**3187**முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்டது.

**1** முதல் **12**ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் மாணவ / மாணவிகளுக்கு புத்தகப்பை வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்டது.

பள்ளிகளில் முப்பருவ முறை அறிமுகம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்டது.

‘‘மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்காக மட்டுமல்லாமல், இக்குழந்தைகளின் தேவைகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்ளும் வகையில், நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வள மையம், (State Resource Centre) ஒன்று சென்னையில் அமைக்கப்படும்’’ என்ற அறிவிப்பு நிறைவேற்றப்பட்டது. இந்த மாநில ஆதாரவள மையத்தின் மூலம், 1,234 சிறப்புத் தேவையுடைய குழந்தைகளும், அவர்களின் பெற்றோர்களும் பயனடைந்துள்ளார்கள்.

2013-14 ல், **54** புதிய தொடக்கப் பள்ளிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது அதுவும் நிறைவேற்றப்பட்டது.

**50** நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. நிறைவேற்றப்பட்டது.

**100** உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது அதுவும் நிறைவேற்றப்பட்டது.

வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியை பெருக்குவதுடன், நமது நாட்டின் பொருளாதார அமைப்பின் துடிப்பான அங்கம் மற்றும், உயிர்நாடியாக, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்காக 20 அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அவற்றில் 18 இனங்களில் அரசாணைகள் வெளியிடப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அங்கன்வாடி மையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், சொந்தக் கட்டடங்களில் செயல்படும் சிறிய பழுதுகளுடன் உள்ள 10,372 மையங்கள் பழுது நீக்கி சீரமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதன்படி 9,102 மையங்களில் உள்ள சிறிய பழுதுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெரிய பழுதுகளுடன் உள்ள 7,449 அங்கன்வாடி மையங்கள் பழுது நீக்கி சீரமைக்கப்படும் என்ற அறிவிப்பின்படி 3,790 மையங்களில் உள்ள பெரிய பழுதுகள் சரிசெய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

54,439 அங்கன்வாடி மையங்களில் 5,000 அங்கன்வாடி மையங்களில் சமைக்கும் நேரத்தை மிச்சப்படுத்தும் வகையிலும், மாசற்ற சுற்றுச்சூழலை உருவாக்கும் வகையிலும், 3.20 கோடி ரூபாய் செலவில் எரிவாயு அடுப்பு, எரிவாயு இணைப்பு மற்றும் அழுத்தக்கலன் (பிரஷர் குக்கர்) ஆகியவை வழங்கப்பட்டு அங்கன்வாடி மையங்கள் நவீனப்படுத்தப்படும் என்ற அறிவிப்பு நிறைவேற்றப்பட்டு விட்டது.

அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் 45 வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை (Master Health Checkup) செய்யப்படும் என அறிவிக்கப்பட்டு, 45 வயதிற்கும் மேற்பட்ட அரசு போக்குவரத்துக் கழக 21,885 ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில், ‘‘புவி இருப்பிட முறைமை **(Global Positioning System)**’’ வசதி கொண்ட கையடக்க இயந்திரங்களைப் பயன்படுத்தி மின்னணு பயணச்சீட்டு வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டு, சென்னை மாநகரப் போக்குவரத்து கழகத்திற்கு 8227, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக(தமிழ்நாடு)த்திற்கு 100, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரத்திற்கு 450, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக்

கழகம், கோயம்புத்தூருக்கு 100 ஆக மொத்தம் 8877 கையடக்க மின்னணு பயணச்சீட்டு கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு பேருந்துகளில் பயணம் மேற்கொள்ள பத்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் குழுவாக முன்பதிவு செய்யும்போது, பதிவு செய்யும் தொகையில் பத்து விழுக்காடு, தள்ளுபடியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டு, இத்திட்டம், செயல்படுத்தப்பட்டுள்ளது.

இரு கால்களும் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவர்கள் / வேலைக்கு செல்பவர்களுக்கு பேட்டரி பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களுக்குப் பதிலாக இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு செயலாக்கம் பெற்று, இதன்மூலம் ஆண்டுதோறும் 1000 பயனாளிகள் பயன்பெற்று வருகின்றனர்.

10 வயது முதல் 14 வயதுக்குட்பட்ட விளையாட்டில் ஆர்வமும் திறமையும் உள்ள 25 மாணவர்கள் மற்றும் மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விளையாட்டில் உயர்தர நுணுக்கங்களுடன் கூடிய விஞ்ஞான ரீதியிலான பயிற்சி அளிப்பதற்கென சென்னையில் உலகத்தரம் வாய்ந்த முதன்மை நிலை விளையாட்டு மையம் ஒன்று அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு விட்டது.

ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் பதக்கம் பெற வாய்ப்புள்ள திறன் வாய்ந்த சிறந்த விளையாட்டு வீரர்கள் / வீராங்கனைகளை தயார் செய்வதற்கான ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி 5 விளையாட்டு வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் விளையாட்டு விடுதிகள் இல்லாத 23 மாவட்டங்களிலும் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அதற்கேற்ப இதுவரை 11 மாவட்டங்களில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. மீதமுள்ள மாவட்டங்களில் படிப்படியாக விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும்.

புரட்சித்தலைவி அம்மா அவர்களால், 1993ம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்ட ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் விளையாட்டு வீரர்கள் மேலும் பயனடைவதற்கு ஏதுவாக ஸ்குவாஷ்

அரங்கம், இறகு பந்து உள் அரங்கம், கையுந்து பந்து, கூடை பந்து ஆடுகளங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கென பிரத்யேக நீர் சிகிச்சை நீச்சல் குளம் ஆகியவை கொண்ட மேம்படுத்தப்பட்ட



ஒருங்கிணைந்த விளையாட்டு வளாகம் 12 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கென அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறன.

சென்னை நுங்கம்பாக்கத்தில் டென்னிஸ் போட்டிகள் நடத்துவதற்காக கட்டப்பட்ட டென்னிஸ் விளையாட்டு அரங்கம் 18 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில் அதனைப் புனரமைக்க வேண்டி, 4 கோடியே 50 லட்ச ரூபாய் ஒப்பளிப்பு செய்யப்படும் என அறிவிக்கப்பட்டது. அதன்படி பணிகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் உள்ளது.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின்கீழ் இயங்கும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் அனைத்தும் கட்டிமுடிக்கப்பட்டு 15 முதல் 20 ஆண்டுகள் ஆகிவிட்டபடியால் அவைகளை சீரமைத்து புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை கருத்தில் கொண்டு, ஒருமுறை சிறப்பு மானியமாக ரூ.5 கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கு ஏற்ப அரசாணை வெளியிடப்பட்டு பணிகள் துவங்கப்பட்டு நிறைவுறும் நிலையில் உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவரங்கள் போதாதென்றால், ஒவ்வொரு திட்டத்தை பற்றியும் விரிவாக எடுத்துக் கூறவும் நான் தயாராக உள்ளேன் என்பதையும் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * * * * * *

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**